மானே மரகதமே வஞ்சனைகள் செய்த துண்டோ 635

------

கொம்பனை- கொம்பு போன்ற பெண் ; சூல் - கர்ப்பம்; கரு; காணாக்கடி - விஷக்கடி நச்சுப்பூச்சு காலுகடி; கண்ணேறு - திருஷ்டி; எட்டி - எட்டிக்காய், நச்சுக்காய்; பட்டி - மாட்டுக் கொட்டில்;

--------------

ஆராகிலும் நோக அவகடங்கள் செய்தாரோ
பாராதார் பார்த்தாரோ படுகொலைகள் செய்தாரோ
மலையேறி மேய்ந்திடத்தே மலைத்தழைகள் தின்றீரோ
நாவேறோ கண்ணே நஞ்சுபல தின்றீரோ
பொறி விரியன் புல்விரியன் புற்றரவந் தீண்டிற்றோ 640

காடேறி மேய்ந்திடத்தே கன்னிமணங் கொண்டீரோ
எரி புழுக்கள் செம்புழுக்கள் ஏதாகிலு நக்கிச்சோ
உந்தன் திருமேனி யுள்ளுடைந்து வாட்ட முற்று
வந்த திவையேதென் றறியேன் மாதாவே யென்று
குங்கும முஞ் சந்தனமுங் கூட்டிக் குழம்பு செய்து 645

செங்கை யுற வாரித் திமிர்ந்தாளே தேன்மொழியாள்
அப்போது வப்பசுவுக் கம்மயக்கந் தீராது
மச்சேந்திரன் தேவி மனையிடமே போய்ப் புகுந்து
காடியும் கூழும் கழுநீரும் கஞ்சி புல்லும்
ஓடியெடுத்து வந்து வைத்தா ரொரு நொடியில் 650

சேரக் குடித்து தெகட்டிக் களிகூர்ந்து
பார்க்க வளமிகுத்துப் பார்த்துநெரித் தார்ப்பரித்து
பட்டணத்தே சுற்றிப் பல்லடிக்கொண்டே கதறி
இட்ட புல்லுந் தின்னாது இரையெடுத்து மேயாது
சித்திர நவரத்தின மணித்தேர் வேந்தன் வாசலிலே 655

முத்துப் பதித்த முகப்பருகே வந்துநின்று
ஆர்க்க முழங்கும் அபயம் அபய மென்றும்
கொம்பு சுழற்றுங் குறு வேர்ப்புத் தான் கொள்ளும்

பொன்னும் பொருளும் பொருந்தாது காணெனக்கு
என்றுஞ் சிவனளப்பன் இருநாழி நெற்படி காண்

-----

மருங்கு - பக்கம் ; வண்ணச் சரம் - அழகான மாலை ; ஆரம் -மாலை ; வார் காது - நீண்ட காது; பாடகம் - சிலம்பு; பரமபதம் - இறைவனடி எய்தல்: சோதி - ஒளி

------

நிறை நாழி தன்னில் வைத்த நெல்லமையும் மாதாவே
இரு நாழி நெல்லா லிராச்சியத்தை யாண்டிருப்பேன்
எங்கும் படியளப்பேன் எல்லாம் படைத்தளிப்பேன்
மங்கயரே போய்வாரேன் மாதுயரம் நீர் தீர்ந்து
தேசம் வெளிச் செறிக்கச் செல்வனார் தோன்றுகிறார்

உலகம் வெளிச்செறிக்க உத்தமனார் தோன்றுகிறார்
தேவேந்திரன் பொய்கை தனில் செங்கமலப்பூவில் வந்து
ஆவின் வயற்றில் உதிக்கிறா ரன்புடனே
பாற்பசுவின் யோனிபட வொண்ணா தென்றருளி
வேற்றுருவங் கொண்டு விலாவினாற் றோன்று கிறார்

அப்போது பால்பசுவுங் ஆற்ற முடி போகாமல்
செப்பால் மடி தழைந்து சீம்பால் முலை சுரந்து
நாலு முலையும் நலமாகப் பால்பொழிந்து
வேதனை போந்து வெடு வெடென்று மெய் சோர்ந்து
மோதி விழுந்து முகிளொடித்துத் தாள் நெரித்து

நஞ்சு திமிர்ந்து நடுநெகிழ்ந்து நாவுயர்ந்து
மைந்தரை ஈன வயிர வயிறு நொந்து
மானாக மீன வயிர வயிறு நொந்து
ஆன திருமேனி அனுக் குலைந்து சீரழிந்து
நொந்து மிடை மிடைந்து நோக்காடு மெத்தியபின்

---

குழல் -கூந்தல்; கண்ணாயிரமுடைய காவலன் - ஆயிரங்கண்ணணாகிய இந்திரன்; அம்பலம் - மேடைகள்; தாதி - தோழி; பூங்கிளி - பூங்கிளி போன்ற பெண்;

-----

இந்திரனார் தேவி யிரங்கி விழுந் தோலமென்ன
பமமேசுர னாரும் பார்பதியார் தன்னருளால்
கருமாரி தன்னிலே கை கொடுக்கவே மகிழ்ந்து
பூவார் புரிகுழலாள் பூமாதேவி ஓடிவந்து
நாவரை கட்டி நடுவே திரை வளைத்து

வாழை கழுகு மஞ்சள் வனக்கரும்பு தானிறைந்து
சந்தனத்தால் கால்நாட்டிச் சாந்தால் தரை மெழுகி
குங்குமத்தால் கோலமிட்டுக் குத்து விளக்கு வைத்தார்
பொன்னின் அகலேந்தி நின்றாள் புவிமாது
மின்னொளி போல வெளிப்பட்டா ருத்தமனார்

அன்பால் மொழிய வொரு ஆண்பிள்ளை யாயினதால்
அறவே மனமகிழ்ந்து ஆண் பிள்ளை யாயினதால்
பொன் போல் வெளிச் செறிக்க புண்ணியனார் வந்துதித்தார்
உத்தமனார் வந்துதித்தார் ஓம் நமசிவாய மென்ன
பொற் றளிகை ஏந்தினாள் பொற்செப்பிள முளையாள்

-----

பொன்னறுகு - பொன் போன்ற அறுகம் புல்; அமரர்கோ - தேவர் தலைவன்; வேதன் - பிரம்மா; விருமா - பிரம்மா என்பதன் திரிபு; மனை - வீடுவாசல்; வாணுதல் - ஒளி பொருந்திய நெற்றியுடைய பெண்; மறுமாற்றம் - மறுமொழி;

----

தளி கையி லேந்தினாள் தாமக் கருங் குழலாள்
பொன்னின் கலத்தில் பிறந்தார் புகழ் வேந்தர்
பூமி விளங்கப் பிறந்தாரே புண்ணியனார் சி
த்திரை மாதத் திற் றேதி சுப வருஷம்
உத்தம மான சிவயோக இலக்கணத்தில்

அந்தப் பவுரணையில் ஆதித்த வாரமதில்
சித்திரைக்குச் சித்திரையில் சென்மித்தார் பாலகனார்
சென்மித்தார் சென்மித்தார் சித்திர புத்திரனார்
னெழுத் தாணியும் பொத்தகமும் பூணூலும்

சங்கநிதி யதுமநிதி தான் முழங்க வான் முழங்க 1320

அங்கொரு தாதி யறிய வந்தா ளன்புடனே
தேவேந்திரற்குத் தினபோனகஞ் சமைத்து
காவலர்க்குப் பொன்னின் கலம்வைத்து
நீர்வார்த்து பாலடிசி லிட்டுப் பரிந்த முத்துத் தாளளிக்கும்
நாலுவகை முப்பிகளில் மேலான நன்னுதலாள் 1325

செங்கழ னிறத் தாதி தெளிவுற் றெழுந்திருந்து
இந்திரனார் கோவிலிலே ஏறியவ ரினிதாய்
வளைத்த திரையை வரிவளைக் கையால் நீக்கி
பனிக் கவரி வீச நின்று பைங்கொடியுமென் சொலுவாள்
எந்த னணங் கரசே இராச குல தீபகமே 1330

மைந்தர் பிறந்தாரே மாறாய சோபனங்கள்
சோபன மென்று தொழுதங் கடிபணிந்தாள்
ஆமடி சோபன மென்றா ளானந்த வாழ்மாரி
கையருகே நின்று கவரிகொடு வீசினாள்
முத்தின் கவரி யிடுவாள் முகம் நோக்கி 1335

---

கொம்பனையார் - கொம்பு போன்ற பெண்கள்; சுடரொளி - சூரிய ஒளி; சோதிவிட - ஒளி விட; வசந்தன் - மன்மதன்; வசந்த காலம் எனினுமாம். சல்லிகை - இசைக் கருவி; முழவு - மத்தளம்.

--------

முன்னே கவரி யிடுவாள் முக னோக்கி
வயிரக் கவரி யிடுவாள் வாவென்று
மாணிக்கப் பொற்கவரி மற்றொருவர் கைக் கொடுத்து
தேவேந்திரனாரைக் தீபுரமாய்ச் சென்று கண்டு
ஆவின் வயிற்றில் லரத்தாரான் தோன்றியதும் 1340

பசுவின் வயிற்றில் பாலகனார் தோன்றியதும்
பாலகனை ஈன்ற பசு பரமபதம் நாடினதும்
கோவதையார் பூந்தேரில் கூட்டோடே
போனதுவும் வானவர் கோன் றானறிய மாராயம் நீயுரைத்து

-------

ஈனன் - இழிந்தவன்; காற்றில் என்பது திரிந்து காத்தில் என்றாயிற்று சத்த உலகம் - ஏழு உலகம்; போனகம் செய்தல் - உணவு உண்டல்; சமையும் - ஆக்குக.

-----------

மேள வகையும் விருதுகளுந் தான் முழங்க
விருதுபல முழங்க வீராணந் தான் முழங்க
சுருதி மறை முழங்கத் துந்துமிகள் தொந்தமென்ன
கின்னரி வீணை கிருபையுடனே முழங்க
வண்ண மணிமுரசு வையக மெல்லா மதிர 2050

ஈரே ழுலகு மதிர முழ வதிர
தாரை தகுதி யென்ன ச்சங்குகுழுமு மென்ன
தேரி லசைந் தாடிவர தேவரெல்லாந் தூவிவர
தேவமலர் தூவத் தெய்வக் கன்னி வாழ்த்திவர
தோகை மயிலாடிச் சோபனமுங் கூறிவர 2055

கோகுலமுந் தாராவும் கூவும்குயிலும் பயில
அன்ன நடைபயில அஞ்சுகங்கள் சொற்பயில
மன்னர் பெருமான் மணிக்கனகத் தேரில் வந்தார்
இவரார் காணென்பாரும் இந்திரர்கா ணென்பாரும்
தவறாத சத்தி அரிச்சந்திரர்கா ணென்பாரும் 2060

சந்திரர்கள் சூரியர்கள் தம்பிகா ணென்பாரும்
ஏழைக் கிரங்கும் இராசாக்க ளென்பாரும்
ராமற் கிளைய லெட்சுமணர் காணென்பாரும்
கந்தர்கா ணென்பாரும் கற்பகங் காணென்பாரும்
இந்த வடிவுள்ளா ரெங்குள்ளா ரென்பாரும் 2065

இராச வடிவுடையா ரெங்குற்ற ரென்பாரும்
எந்த வுலகி லிருந்து வந்தா ரென்பாரும்
எந்தெந்த தேசத்தி லிருந்து வந்தா ரென்பாரும்
என்ன வரிசை செய்தாலேற்கு மிவர்க்கு கென்பாரும்
பொன்னும் நவரத்தினமும் போதச் சொரிவாரும் 2070

இந்திராணி பெற்றெடுத்த இன்பமே பள்ளி கொள்ளும்
ஆளப் பிறந்த அரசரே பள்ளி கொள்ளும்
அஞ்ஞானந் தீர்த்த அரும் பொருளே பள்ளி கொள்ளும் 2145

----

காளகண்டர் - கழுத்துக் கறுத்த சிவபிரான் ; அந்தரம் - ஆகாயம்; அரனார் - சிவபெருமான் ; மதம் - வெறி, ஆணவம்;

----------

ஏழைக் கிரங்கும் ராயரே பள்ளி கொள்ளும்
இந்திரனுர் கன்றில் மணிரத்தினமே பள்ளி கொள்ளும்
அடியார்க் கெளியவரே அன்பரே பள்ளி கொள்ளும்
குடி தாங்க வந்துதித்த கோமானே பள்ளி கொள்ளும்
என்றரிய மால் பிரமர் காணா ரிறைவர் பதம் 2150

கண்நிறையக் கண்டருளுங் காவலரே பள்ளி கொள்ளும்
பண்டை விதிப்படியே பாரிலுள்ள நன்மை தீன்மை
கண்டு கணக்கெழுதுங் காவலரே கண்வளரீர்
உறங்குறங்கும் பாலகரே உத்தமரே கண்ணுறங்கும்
சித்திர புத்திரரே சீமானே கண்ணுறங்கும் 2155

உத்தமரே பள்ளி உறங்கு மலர்ப்பஞ்சனை மேல்
பள்ளி கொள்ளுமென்று பலசுாலுஞ் சொன்னளவில்
சொல்லுவதென் தாதியரே துயிலவோ வந்தோனும்
பகலும் அநவரதனாழிகையும்
(தாலாட்டு முற்றும்)
எனக்கு முறக்க முண்டோ ஏதுநான் சொன்னாலும் 2160

கணக்கு விளங்க வந்த காரியத்தைக் கேட்டருளீர்
சீரார் பெருங் கணக்குந் தெய்வத் திருக்கணக்கும்
ஆராய்ந் தெடுத் தெழுதி அட்டவணை சேர்க்க வந்தோம்
பாவிகளை வெவ்வேறே பட்டோலை கொள்ள வந்தோம்
தாதியரே யாவர்க்கும் தன்மந் தலைகாக்கும் 2165

----

கண் காட்சி யாக வந்து கண்டார்க ளெல்லோரும்
செசெ வென்றே துதிக்குந் தேவர் சபை தனிலே
இம தன்மராசர் இனிதாகக் காணுகைக்கு
மணி வலைக் காரர்களும் மன்னவருந் தற்சூழ
சிறுவலைக் காரருடன் தென்னவருந் தற்சூழ

---

ஆனை உரித் தோலான் - ஆனைத் தோலாடையுடைய சிவன் குமிறி - குமுறி ஒலித்து ; ஆர்க்க - பெரும் ஆரவாரம் செய்ய; புலித் தோலுடையார் - புலித் தோலாடையுடைய சிவன்; ஆறு சடைமுடியார் - கங்கையினைக் சடையில் சூடிய முடியுடைய உற்ற என்பதன் திரிபு உத்த என்பது.

-----------

வீசு வலைக் காரர்களும் வேந்தருந் தற்சூழ
பாச மெடுக்கும் படுவாயர் தற் சூழ
உலக்கைக் கழுக்காணி எடுத்தோடினார் தற்சூழ
கிலுக்குத் தடிக்கார கிங்கிலியர் தற்சூழ
இருப்புத் தடிக்காரர் ஈனாதார் தற்சூழ

நெருப்புந்தான் கொண்டு நெடுமுடியார் தற்சூழ
அட்டைக் குழி கொண்டு அண்டையிலே தற்சூழ
வெட்டுக்கிடா கொண்டு வேடர்களுந் தற்சூழ
கட்டுக் கிடா கொண்டு காப்பிலியன் தற்சூழ
சிட்டுப்பிடிக்குஞ் சிலதூதர் தற்சூழ

கருநாய் பிடிக்கும் கருமோடர் தற்சூழ
செந்நாய் பிடிக்கும் சிலதூதர் தற்சூழ
அறுக்கிற கத்தி கொண்டு ஆரணியர் தற்சூழ
கறுக்கிற சட்டிகொண்டு கால் கடியார் தற்சூழ
கொத்துகிற கோழிகொண்டு கோலவண்ணார் தற்சூழ

பாயுங் கிடாக் கொண்டு பஞ்சணையில் தற்சூழ
ஈயென்ற பல்லும் எரிகின்ற மூஞ்சியுமாய்
மோடேறிப் பார்த்திருக்கும் மொட்டையர்கள் தற்சூழ
எக்கிடு கத்தியரும் ஈனா இருஷிகளும்
பக்குவிழிப் பறவைகளும் பற்கோரைப் பல்லிகளும்

கட்டுக் கயறுங் கடுவிடமும் தீநாகம்
அட்ட திக்கும் நின்றதிர ஆர்ப்பரிக்கும் தூதர்களும்
எத்தி யழைத்துவிடும் இடும் பரிடும் பழித்து
குத்தி யமுக்கிக் கொடுப்போற தூதர்களும்
நாணு கொள்ள நஞ்சுதின்ன நற்றுணையாக நின்று 2295

--

கன்மவினை - கரும வினைகள்; ஈனங்கள் - இழி செயல்கள் திருவாய் மலர்தல் - கூறுதல்; கனகசபை ஆதித்தர் - சூரியன்; பொன்னம் பலம்;

-------------

வேணு மென்று வஞ்ச வினை விளைக்குந் தூதர்களும்
பீடை பலபிணி நோய் பிணி மூப்புச் சாக்காடாய்
கூட உலாவிக் கொடு போற தூதர்களும்
கூட்டிக் கொடு போய்க் கொலைகளவுக் குட்படுத்தி
காட்டிக் கொடுத்துக் கடக்க நிற்குந் தூதர்களும் 2300

கொள்ளை களவுக்குக் கூடநின்று கூற்றுவனாய்
கள்வ னென்று வெட்ட கழுவேற்றுந் தூதர்களும்
ஆறுதிங்கள் போனதாங் கரை வயிறு பிள்ளையுடன்
சூறுவனாய்ச் சூழ்ந் துயிரை சூறைகொள்ளுந் தூதர்களும்
நெட்டூரக் காரருடன் நின் முடுகுத் தூதர்களும் 2305

குறட்டிக் குறளிகளுங் கூளிகளும் காளிகளும்
நீலியும் நீலியும் நிணமுடன் நிணமலியும்
சூலியும் பாலியும் துர்க்குணச் சண்டாளிகளும்
அய்யனும் துர்க்கையும் ஆங்காரத் தேவதையும்
வெய்யிலுகந்தோனும் வெறி வீர பத்திரனும் 2310

அம்மனனு மந்தனுடனாதி வயிரவனும்
கோல முயல கண்டன் குமர கண்டன் கூற்றுவனும்
மூதேவியுஞ் சனியும் முன்னடியும் பின்னடியும்
ஆகாச கன்னியரும் அற்பப் பிசாசுகளும்
வம்பியும் துந்துமியும் வம்பிகளும் தும்பிகளும் 2315

வந்தருளி இந்திரனார் வாய்த்த திருமாளிகையில்
அந்திமிகும் பாலர் தம்மைக் கண்டு புவிமாது
அறையா முறையா கொய்யா இராசாவே
அறைய முறையா கோதனம் இராச்சியமே
மார்க் கண்டன் பொருட்டால் மறலியுயிர் பொன்றுதலால் 2365

தீர்க்க முள்ள பூவுலகில் சென்ம மிகுத் தேறுதலால்
கன்ம வினை சூது கவடு பாவம் பெருத்து
தன்ம செயமில்லாதே தாரணியுந் தாங்குதில்லை
முந்திய சென்மங்கள் முழுதும் முடியுதில்லை
வந்து கலி முகந்து வாள் நகரி கொள்ளுதில்லை 2370

பூமி பொறுக்கப் படுகு தில்லை புண்ணியரே
தாம முடியீ ரென்தலையால் சுமக்க லுற்ரேன்
மாலை முடியீரென் மார்பாரச் சுமக்க லுற்றேன்
ஏடலர் பூந்தாரீர் எனக்குப் பால் சுமக்க லுற்றேன்
தொங்கலப் பூ முடியீரென் தோளால் சுமக்க லுற்றேன் 2375

பங்கம் பதினாறும் படருற்றேன் பாலகரே
வந்துவிடு வென்றான் வாழ் நகரி பாழாக்கி
போந்து விடுவேனான் பூலோகம் பாழ் கிடத்தி
பாழ்கிடத்தி னான் வருவேன் பாலகரே என்றுரைத்து
பூமி மெத்த னோக புண்ணியனாரே துரைப்பார் 2380

---

இமதன்மா - இயமதருமன்; சேவில் - காளை வாகனத்தில்; ஆபாத - அடிமை நிலை

மன்று - அம்பலம்; தஞ்சம் - பற்றுக்கோடு; சரணாகதி:

----------

வருவோ மென்று சொல்வதென்ன மாதாவே இப்போது
சிறுவன் பிறக்கிலும் யான் செய்வதொரு காரியமென்று
அறையா முறையா கோவென்றாள் ஊரறியக் கூப்பிடுகிறீர்
பிறையணியும் வேதியர்முன் போயுரையும் பேதையரே
என்றருளிச் செய்ய இருவிழிகண்ணீர் சொரிய 2385

ஏவல் பெற்றே னென்று இணைக் கடகக் கை தொழுது
பணியப் பெற்றே னென்று விடைபெற் றெழுந் திருந்து
உவரிப் பெருங்கடலை ஒருநொடியில் போந்தருளி
தெள்ளு திரு மைக்கடல் தீர்த்த முகந் தாடி
வள்ளுவனு மங்கே மயிர் முடிந்து பின் போட்டு

சிந்தை மகிழ்ந்து திருநீறுற வணிந்து
சந்தி சதுர்வேதஞ் சாத்திரமுந் தான் மொழிந்து
வீடு புகுந்து மிகவே மனங் குளிர்ந்து
மாலை முடியோ மது மாங்கிஷங்களுண்டு
கோல முடை. மும் மதங்கள் கொண்டு வெறி மிகுத்து

----

வேழமுகம் - யானைமுகம்; ஆதித்தன் - சூரியன்; பாதாதி கேசம் - அடி முதல் முடி வரை;

பாகு - வெல்லப்பாகு. பஞ்சக்கரம் - ஐந்தெழுத்து மந்திரம் நமசிவாய என்பது;

-----------

ஆபரண மெல்லாம் அணி அணியாத் தானணிந்து
பறை யறையுங் கைக்குப் பல மோதிரங்களிட்டு
பறை யறையுங் கைக்குப் பலனாங்கு தான் கட்டி
கண கணம் பொற் காப்புக் கனக வளைதான் கட்டி
தொங்கலப் பூந்தாரன் துடியிறுக்கி வாரிறுக்கி

தாம முடியான் மணி முரசைத் தட்ட யெடுத் தெரிட்டு
வார் தோல் நரம்பெலும்பு மார் நிறையவே போட்டு
மத்தக சந்தனணை வலமாக வந்து கண்டு
மத்தகத்தைத் தட்டி மகசானை மீதேறி
ஆனைமேலேறி அழகு திரு மாலையிட்டு

மான கரி யெல்லாம் வலமாகச் சுற்றி வந்து
தீர்க்க முடன் பூலோகம் தெண்டன மாகப் போந்து
ஆர்க்க முழக்கிட்டு அதிரப் பறை யறைந்தான்
காயிலை பூம் பிஞ்சும் பிதிர களனி யிதழ் தானி ருக்க
துய்ய கனி வீழவென்று சொல்லிப் பறை யறைந் தான்

பறை யோசை கேட்டுப் பழுத்த பழமத்தனையும்
தரை மீதுதிர்ந்து விழத் தாரணியி லுள்ளோர்கள்

வற்றல் வடகம் வகையேதான் பொரிப்பார்
தேங்கா யரிவார் சிறுகிழங்கு தானரிவார்
கற்பகமான கருணைக் கிழங்கு தன்னை
பொற் பதமாகச் சமைத்துப் புளி யிடுவார்
ஆயிரத் தெட்டு அருங்கறியுஞ் சேர்வை செய்து

காயம் மிளகு கடுகு பலசம் பாகம்
சேர நிறையளித்துச் சீரகமுந் தாளித்தார்
தாளி தமும் பச்சடியும் சார்ந்த பருப்புப் பொறிக்கறியும்
ஆயிரத் தெட்டு அருங்கறியுந் தான் சமைத்தார்
பதினாயிரக் கலப்பால் பத்தொன்றாகக் காய்ச்சி

அழகாகச் சேர்த்தங்கடுக்கினா ரத்தனையும்
இன்பரச வர்க்கத்துள்ளே துண்ட துவகையும்
அன்புடனே கச்சாயமான வகை நூறளித்தார்
ஒக்க வடுக்கினார் உத்தரணிக் காலுடனே
முட்ட வடுக்கினார் முத்து மாணிக்கத் தூணோடே

சேர வடுக்கினார் செம்பவளக் காலோடே
இந்திரனார் மைந்தர் இருந்த பெருஞ்சபையில்
கூடலடுக்கிக் குவிமுலையார் வீற்றிருந்தார்
போசனம் செய்து புறப்படும் புண்ணியரே
நந்தியுடன் நாரணரும் நான்முகனும் வந்திருந்தார்

----

நந்தவனம் - பூஞ்சோலை; கொந்தளகம் - கற்றைக் குழல்; புறம்பு - வெளியே; கடுநரகு - கொடிய நரகத்தில்; ஆதித்தன் - சூரியன்; அந்தியடுகையில் - மாலைநேரத்தில்

------------

என்றரிய மாலயனோ டேகாந்த மாயிருந்து
புன்றியனா ரப்பொழுது பொத்தகம் பார்த் துரைப்பார்
மார்க்கண்டையர்க்காக யமன் மாண்டான் சிவபாதத்தால்
தீர்க்க முள்ள பூமி சுமை பார மாற்றாமல்
வந்து முறையிட்டு மயங்கி யுடுப் போவதனால்

எல்லவருங் கேளுமென்று ஏடெடுத்து வாசித்தார்
அரிய பெரியவரே அம்பலத்தி லுள்ளோரே

பெரிய வகை ஏதுபேசுகிறீர் பெற்றியரே
திசைமுகனும் செந்தாமரை மலரிற் றேற்ற மென்றர்
செங்கண் நெடுமாலத் திருக்கடலிற் றேற்ற மென்றார்
கடலோ குறுமுனிவன் கையிலடக்க மென்றார்
கார் முனியோ கும்பக் கலசத்திற் றோற்ற மென்றார்

குடமோ புவிமீதிற் கொஞ்சமா மண்ணென்றார்
கோலப் புவியுஞ் சேடனுக் கங்கோர் தலையிற் பாரமென்றார்
சேடனோ அம்மைச் சிறுவிரலுக்காழி யென்றார்
ஆடரவம் பூண்ட வம்மை அய்ய ரிடப் பாக மென்றார்
அய்யரும் அன்பா யிருதயத்துள் வாழ்வ ரென்றார்

---

தாள் தாழ்ப்பாள்; ஓரி - நரியின் வகை; சென்மி - பிறக்க; வேசி - இருமனப் பெண்டிர்;
நாலிரண்டு - பிறர்மீது அவதூறு கூறல்;

-----------

அன்பர் பெருமை அளவிடவென்றால் வசமோ
விர்மாவு மிப்படியே கிடக்கக் கருத்தென்றார்
விட்டுணுவோ மாயை அழிக்கக் கருத்தென்றார்
சிவனால் கிருபை யருளக் கருத்தென்றார்
சென்மச் சனியன் அழிக்கக் கருத்தென்றார்

நமனாருயிரை வதைக்கக் கருத்தென்றார்
யாமிவை யெல்லாம் எழுதிச் சேர்க்க கருத்தென்றார்
எழுதுங் கணக்கடவும் எம்பிரான் கற்பனையும்
பழுதிலா வாசகத்தின் பண்பும் பலநடவும்
சிவனொருவ ரல்லாது சேரவுக மடையும்

பிரளயமும் கொத்து விட்டுப் பின்னும் வகுத்து விடும்
அகில தலமும் புரக்கும் ஆதி பர மேசுரர்பால்
எவரெவர்கள் செய் தொழிலும் யாமெழுது வாறீ தெனவும்

---

வீரியர் - வீரமுடையவர்; பழுக்காய் - பாக்கு; கமுகு - பாக்கு;

----

கண்ணேறு பட்டவரைக் கண்ணழிவு சொல்பவரை
புண்ணொடு வேதனையைப் போவுழையுமென்றார்
நாவேறு னாவுழலை நஞ்சுடைமை செய்பவரை
பாழ்வா யுரைப்பவரை பட்சியாய் சென்மி யென்றார்
செய்யாக் கருமங்கள் செய்த அரும்பாவிகளை 3090

பொய்யாயப் பாய வண்டாய்ப் புழுவாய்ச் செனியுமென்றார்
கோயிலுடைமை தனைக் கொள்ளவு தின்பவரை
நாயின் வயிற்றில் செனியு சென்றார் நாயனார்
தன்கடமை நீக்கிப் பிறர் கடமை வாங்குவரை
சண்குருடாக் கழுதையாய்ச் சென்மி யென்றார் 3095

சிவத்துரோகி குருத்துரோகி சென்மத் துரோகிகளை
சாமத் துரோகிகளைச் சன்னபின்னலாயறிந்து
எரிக்கிற கட்டியிலெரி யெழவே தானெரித்து
கருக்கிப் புழுக்கிக் கடுநரகில் தள்ளு மென்றார்
அப்பாவி ஏடு அற எழுதிப் போட்டதற்பின் 3100

மற்றேடெடுத் தருளி வாசித்தார் வாழ்வேந்தன்
தெள்ளு புனலாற்றில் திருக்குளத்தில் பொய்கை தன்னில்
உள்ளுடை யில்லாமல் குளித்திடும் ஊதாரிகளை
அர்ப்ப சலம் பண்ணி அடிக்கழுவா லோபிகளை
துறப்பாவு சுற்றந்தனை யழியுந் தூவைகளை 3105

கட்டிச் சமணர் கையில் காட்டிக் கொடுத்தடித்து
அட்டைக் குழியிலமுத்து மென்றாரத்துயர் கோன்
கர்ப்பம் மனைவாழ்வு கிணறழிவு செஙபவரை
கற்புடைமையில்லாத காமரவு தாரிகளை
திரியா யுரூபமுந் திண்டுமுண்டுஞ் செய்பவரை 3110

----------

கன்னல் - கரும்பு ; வேய் - மூங்கில்; கதலி - வாழை; காரா -கரியநிறமுடையபசு;
கதிர்சூடு - நெல்கதிர்கட்டுக்கள்;

-----------

ஆழ் நரகிற்கே யழுந்த எழுதி விடீர்
பாழ்வாய்ப் பறப்பவரைப் பஞ்சமா பாதகரை
ஏழா நரகுக் கிரையா யெழுதி விடீர்
தீட்சை யுபதேசம் சிலசமய மற்றாரை
அஷ்ஷ மா நரகத்தி லழுந்த எழுதி டுவீர்

பட்டைக் கரையில் படு பாவிகளை யெல்லாம்
அட்டைக் குழிக் கிரையா யட்டவணை கொண்டு விடீர்
தொழு பாவங் கண்டு சொல்லி விலகாதாரை
ஏழை யழுத குரலே தென்று கேளாதாரை
பாச்சுச்கு திரைப் பயணத்தைப் பாதகரை

நீசரற்ற பாவிகளை நினமோ டுலுத்தர்களை
அநியாயங் கண்டு விலக்காதிருந்த வரை
அநியாயக் காரரவ ரென் றெழுதி விடீர்
மூத்தா ரிருக்கையிலே முன்னரங்க மேறிச் சென்று
ஆத்தான மேறி அழி வழக்குச் சொல்பவரை

வழக் கில்லா வழக்குக்கு மாரேந்திக் கொள்பவரை
கணக்கழிவு சொல்பவரைக் கையோரஞ் சொல்பவரை
தள்ளி வழக்குரைத்துத் தள்ளி விடுபவரை
எல்லை நரகுக் கிரையாய் எழுதி விடீர்
குடியிற் பிறந்தாரைக் கோத்திரத்தி லுள்ளாரை

--

அடவடவே - முற்றிலுமாக; அகதி - யாரு மற்றோர் அகோராத்திரி - நள்ளிரவுப்போது;
கனஉபசாரம் - மிகுதியான வரவேற்பு

----------

வடிவுக் கினியாரை வங்கிஷத்து நல்லாரை
பூண்ட நெறி யன்பு பொறை கற்புடையாரை

--

மாதவம்-உயர்ந்த தவ ஒழுக்கம்; மட்டு - தேன்; திட்டாந்திரமாக - (வழக்குச் சொல்; ) அனுமானமாக

----

அருதி வயலதனைப்ரார்த் தலைத்தா னோர்பாவி
ஆறலைத்த பாவிதனை அத்துயர் கோன் கண்டருளி
வாய் மதத்தைப் போக்கும் வகை மாயமேது செய்தார்
வித்திட்டுப் பாழாய் விலைநிலமுஞ் சாவிகளாய்
சத்தும் விளையா தெழுதினார் தார்வேந்தர் 3640

வகுத்த புருஷனையும் மைந்தரையும் வஞ்சமுற்று
தலைப் பண்டம் வாங்கி யவள் தன்வாய் தனிலிடுவார்
தாழிதனில் பால் காய்ச்சி சங்குப்பாலில்லை யென்பாள்
நாழிமரக் கால் நடு நடுங்கவே அளப்பாள்
நன் மணிக் கோர்வை நடு நடுங்கவே அறுப்பாள் 3645

தன் மணி யென்று தன் கழுத்தில் கோர்த்திடு வாள்
பாலகர் தன் பண்டம் பலகால் திருடினவள்
நீலி யவளாய் எழுதினார் நீடுலகில்
பாவ கன்ம தோஷம் பதி பசு பாசம் விளங்க
ஆகம நூல் சாஸ்திரங்க ளப்போ தருள்புரிந்தார் 3650

சாஸ்திரம் வேதாகம நூல் தப்பாத தடவடவே
பார்த்து வருகையிலே பட்டோலை கொள்கையிலே
உபதேச மான கணக்கு ஓதிவருகையிலே
அமராபதி யாள் அறச்சாலை தோன்றியதாம்
சத்திய வாசகங்கள் தப்பாத மென் மொழியாள் 3655

---

திகவடிகள் - தொல்லைகள்; துன்பங்கள் (வழக்குச் சொல்) அளவறுக்க முடியாது - அளவிட முடியாது; பர்த்தா - கணவன்; நிர்ப்பந்தம் - தொல்லைகள்.

----------

